சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.44/2020

வாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. கணேசன் | த/பெ: பக்கிரிசாமி |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 09.04.2025 | தாலுக்கா: |

முதல் விசாரணை ..

நான் இவ்வழக்கில் 3 ஆம் தரப்பினர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தில் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

சரோஜா எனக்கு சின்னம்மா முறையாகும். எங்கள் தாயாருடன் பிறந்தவரா என்றால் இல்லை. அழகர்பிள்ளையும் சுந்தரம்பிள்ளையும் சொந்தம் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கிருஷ்ணம்மாள். சுந்தரம்பிள்ளையின் மகன் தான் சுப்ரமணியன் என்றால் சரிதான்.சுந்தரம்பிள்ளையின் மகள் சரோஜா என்றால் சரிதான்.சரோஜாவின் மகன் மகேந்திரன் என்றால் சரிதான். மகேந்திரன் மனைவி ஜெயந்தி விவாகரத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அழகர்பிள்ளைக்கும் சுந்தரம்பிள்ளைகும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்னை இருந்தது என்றால் இல்லை. சொத்துக்கள் முறையாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் 2011 ஆம் வருடத்திலிருந்து நெடுவாசல் அன்னவாசலில்வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு ஆதார் அட்டை உள்ளது. எனது ஆதார் அட்டை அன்னவாசல் காரைக்கால் மாவட்டம் என்ற முகவரியில் உள்ளது என்றால் சரிதான். ஆதார் அட்டையை 2000 ஆம் வருடம் வாங்கினேன் என்றால் சரிதான். 2000 ஆம் வருடத்திலிருந்து நான் அன்னவாசல் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ரைஸ்மில் காலனி, குமாரமங்கலத்தில் 2010 ஆம் வருடம் வரை இருந்தேன். அந்த இடம் குஞ்சுப்பிள்ளை

என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் குடியிருந்த காலனியில் 6 வீடுகள் இருந்தது. அந்த 6 வீடு கொண்ட காலனியில் ஜெயந்தியும் அவரது கணவரும் வசித்தார்கள் என்றால் சரிதான். அந்த காலனியில் வசிக்கும்போதுதான் ஜெயந்திக்கும் அவரது கணவருக்கும் பிரச்னை ஏற்பட்ட விவாகரத்து மனு போடப்பட்டது என்றால் மனு போட்டது தெரியாது, ஆனால் விவாகரத்து பெற்றது தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.16 ஆவணத்தில் ஜெயந்தி ரைஸ்மில் காலனியில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதனடிப்படையில் ரவிக்கும் ஜெயந்திக்கும் தவறான உறவு ஏற்படவில்லை என்று முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் கற்பனையாக சொல்லிவிட்டேன். எனக்கும் மகேந்திரனுக்கும் பல வருடங்களாக பேச்சுவார்த்தையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் முன்னின்று வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. என் முன்னிலையில் தாவா சொத்து கிரயம் வாங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் நில புரோக்கராக இருந்து தாவா சொத்தை வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக உள்ள ஆவணத்தில் நான் கையொப்பம் ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை. மகேந்திரன் வெளிநாடு சென்ற பின்னிட்டு பணத்தை யாருக்கு எதன் மூலமாக அனுப்பினார் என்று என்னிடம் நேரடியாக சொன்னாரா என்றால் மகேந்திரன் சொல்லவில்லை. மகேந்திரன் வெளிநாடு சென்ற போது எனது சித்தி சரோஜா 5 வருடங்களுக்கு முன்பு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். மகேந்திரன் வெளிநாடு சென்ற போது நான் அவருடன் சென்று அனுப்பிவைத்தேனா என்றால் இல்லை. மகேந்திரன் வெளிநாடு செல்ல நான் தொகை கொடுத்தேனா என்றால் இல்லை. மகேந்திரன் என்னிடம் வெளிநாடு செல்ல பணம் தேவைப்படுவதாக கேட்டாரா என்றால் இல்லை. மகேந்திரன் சிரமப்படும் காலத்தில் நான் உறவினர் என்ற முறையில் பணம் கொடுப்பதாக கேட்டேனா என்றால் இல்லை. மகேந்திரன் எந்த வருடம் வெளிநாடு சென்றார் என்றால் 2010 ஆம் வருடம் சென்றார். 1990 ஆம் ஆண்டே வெளிநாடு சென்றுவிட்டார் என்றாலும் நான் பொய்சொ்ல்கிறேன் என்றாலும் சரியல்ல. மகேந்திரனுகமகு ஜெயந்திக்குமு் 1995 ல் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பே மகேந்திரன் வெளிநாட்டில் வேலைபார்த்தாரா என்றால் இல்லை. எனக்கும் மகேந்திரனுக்கும் பேச்சுவாரத்தை இல்லை என்பதால் தான் அவருக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நகை கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதி சொல்லி தான் தெரியும். நகை மற்றும் பணம் கொடுத்தது பற்றி மகேந்திரனையோ அவரது தாயாரையோ விசாரித்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி

என்னை சாட்சியமளிக்க அழைத்துவந்தார் என்றால் சரிதான். முதல்விசாரணை சங்கதிகள் பிரதிவாதி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னேன். சரோஜாவிற்கு பணம் அனுப்பிய விவரத்தை சரோஜா தான் சொன்னார். எந்த வகையில் பணம் அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. வீடு கட்ட அனுமதி வாங்கியதற்கான ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. வீடு 2001ல் கட்டப்பட்டது. கிரகபிரேவசத்திற்கு பத்திரிக்கை வைத்தார்கள் தற்போது பத்திரிக்கை என்னிடம் இல்லை. எனக்கும் மகேந்திரனுக்கும் எக்காலத்திலும் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் வீடு கிரகபிரவேசத்திற்கு பத்திரிக்கை வைக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த விவரம் தெரியாது என்றாலும் பிரதிவாதியோடு தவறாக உறவு வைத்துக்கொண்டு அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுந்தரம்பிள்ளைக்கும் அழகர்பிள்ளைக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்னை இருந்தால் நான் தற்போது வாதிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சுந்தரம்பிள்ளையின் மகன் என்பதால் அவரை பழிவாங்குவதற்காக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சுப்ரமணியன் சரோஜாவின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சுப்ரமணியனுக்கும் சரோஜாவிற்கும் நடந்த குடும்ப விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சுப்ரமணியனும் சரோஜாவும் அவரவர் குடும்ப விவரங்களை பகிர்ந்து கொண்டார்களா என்றால் இல்லை. அவர்கள் பகிர்ந்து கொள்ளாமல் எதனடிப்படையில் குடும்ப விவரம் தெரியும் என்று சொல்கிறேன் என்றால் ஊர்மக்கள் சொன்னதன் அடிப்படையில் சொன்னேன். சுப்ரமணியன் பாவட்டக்குடி கிளார்க்காக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவர் சம்பளம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதனடிப்படையில் சுப்ரமணியனுக்கு போதிய வருமானம் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் குறைந்த வருமானத்தில் இருந்ததால் சொல்லியுள்ளேன். மகேந்திரன் பொன்பேத்தி கிராமத்திற்கு சென்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை சுப்ரமணியன் பூட்டிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர் பூட்டவில்லை. பிரதிவாதி குமாரமங்கலத்தில் ரைஸ்மில் காலனியில் எனது வீட்டிற்கு அருகே 2 வருடங்கள் குடியிருந்தார். எந்த வருடம் வசித்து வந்தார் என்றால் தெரியவில்லை. நான் 2005 ஆம் வருடத்திலிருந்து 2010 வருடம் வரை ரைஸ்மில் காலனியில் குடியிருந்தேன். ரைஸ்மில் காலனி வீடுகளுக்குண்டான வாடகையை நான் வசூல் செய்து வீட்டின் உரிமையாளர் எனது உறவினர் என்பதால் அவரிடம் கொடுத்துவந்தேன். நான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. காரைக்கால் குருசாமிபிள்ளையை தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு திருக்கொட்டாரம் கிராமத்தில் நிலங்கள்இருந்தது

என்றால் சரிதான்.அந்த நிலங்களை நான் பார்வையிட்டேன்என்றால் இல்லை. உத்திராபதி திருக்கொட்டாரம்கிராமத்தில் இருந்தார். உத்திராபதி நிலத்தை கிரயம் பெற்றிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. கிரயம் பெற்ற போது எனக்கும் உத்திராபதிக்கும் அடிதடி ஏற்பட்டது என்றால் இல்லை. நான் ஒவ்வொரு ஊரிலும் நிலம் வாங்கி விற்பதில் தகராறு செய்து வருகிறேன் என்றால் இல்லை. தாவா வீட்டில்உள்ள பூட்டு உடைத்து புகார் கொடுககப்பட்ட விவரம் தெரியாது. பிரதிவாதியின் சகோதரர் திருவிடைமருதூர் சேர்ந்தவர் என்றால் இல்லை. சுப்ரமணியன் வாதியின் சகோதரர் என்பதால் அவருக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரம் தவறு என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.